இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 63 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 26 – செவ்வாய்க்கிழமை 13 அக்டோபர் 2026 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 63 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 26 - Tuesday 13 October 2026 - Chennai 10 Pages ₹ 5.00

ஞானேஷ்குமாரை பதவி நீக்க முதல் குரல் கொடுத்தவர் எங்கள் தலைவர்! வாயே திறக்காத விஜய்யின் காலைக் கழுவிக் குடிக்கும் மாணிக்கம் தாகூர் போன்றவர்கள் தி.மு.க.வைப் பற்றிப் பேச துளியும் அருகதை இல்லை!

பா.ஜ.க. எதிர்ப்பு குறித்து காங்கிரஸ் புல்லுருவிகள் கழகத்திற்குப் பாடம் எடுக்கத் தேவையில்லை!

தலைமைக் கழகம் கடும் எச்சரிக்கை!

சென்னை, அக்.13-

ஞானேஷ்குமாரை பதவி நீக்க முதல் குரல் கொடுத்தவர் எங்கள் தலைவர் என வும், தொடை நடுங்கி விஜய்யின் காலைக் கழுவிக் குடிக்கும் மாணிக்கம் தாகூர் போன்றவர்களுக்கு தி.மு.க.வின் பா.ஜ.க. எதிர்ப்பு குறித்துப் பேச துளியும் அருகதை இல்லை என்றும், பா.ஜ.க. எதிர்ப்பு பற்றி காங்கிரஸ் புல்லுருவிகள் கழகத்திற்குப் பாடம் எடுக்கத் தேவையில்லை! எனவும் தலைமைக் கழகம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"கூட்டணியில் இல்லாத கழகத்தை நோக் கிக் கூவும் காங்கிரஸ் தலைவர் வாயை அடக்க வேண்டும்! இல்லையென்றால் அடக் கப்படும்!

சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்கு முன்பே, தனது திமிர்ப்பேச்சுகளால், தமிழ்நாட்டில் வலுவாக இருந்த பா.ஜ.க. எதிர்ப்புக் கூட்டணி யைச் சீர்குலைத்த த.வெ.க. அடிமை மாணிக்கம் தாகூர் மீண்டும் தனது வாய்த்து டுக்கை வெளிப்படுத்தியுள்ளார்.

கழகத்தின் வாக்குச்சாவடி முகவர்கள் கூட் டத்தில், கழகச் செயல்வீரர்கள் களத்தில் ஆற் றிய பணியை அங்கீகரிக்கும் விதத்திலும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் பேசிய பேச்சை எடுத்து வைத்துக்கொண்டு, தேர்தல் ஆணையத்தின் பாரபட்சமான நோ்மை யற்ற SIR நடவடிக்கைக்கு வக்காலத்து வாங் குகிறார். இதனைக் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைமை ஏற்கிறதா? SIR-இல் இது தான் அவர்களது நிலைப்பாடா?

தமிழ்நாட்டில் SIR-ஆல் மக்களின் வாக்கு ரிமை பறிபோகாமல் இருக்கத் தங்களால் இயன்றவரை தி.மு.க.வினர் பாடுபட்டனர். படிவங்களை நிரப்பிச் சமர்ப்பிக்க மக்களுக்கு உதவினர். எனினும், வரைவு வாக்காளர் பட்டியலிலும் பின்னர் இறுதி வாக்காளர் பட் டியலிலும் பலரது பெயர்கள் இடம்பெறாமல் போனது அனைவரும் அறிந்த உண்மை. இப்படி ஊரறிந்த உண்மையைத்தான் இந் தத் த.வெ.க. கால் அமுக்கி மாணிக்கம் மறைக்கிறார்.

உண்மையில், தி.மு.க.வின் தோல்விக்கு S.I.R.-உடன் சேர்த்து மற்றொரு காரணமும் இருக்கிறதுதான்.

அதனை மறுப்பதற்கில்லை. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித் துக் கொண்டே, தினமும் தி.மு.க. குறித்து மாணிக்கம் தாகூர், கிரிஷ் சோடங்கர், பிர வீன் சக்ரவர்த்தி போன்ற காங்கிரஸ் கட்சியில் இருக்கும் சில புல்லுருவிகள் தெரிவித்த கருத் துகளும் ஒரு காரணமாக அமைந்தன. இத னால், கூட்டணியின் நற்பெயரும் ஒற்றுமை யும் பொதுவெளியில் கேள்விக்குள்ளானது. தி.மு.க. கூட்டணியிலும், காங்கிரஸ் கட்சியி லும் அங்கம் வகித்துக் கொண்டே, வேறு கட் சியின் ஸ்லீப்பர் செல்களாக இவர்கள் செயல் பட்டார்கள்.

காங்கிரசை தூக்கி எறிந்தபிறகு கழகத்திற்குக் கிடைத்துள்ள பேராதரவு!

இதனால், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே கூட்டணியின் வெற்றிக்காக உண்மையாக உழைத்தவர்களின் உழைப்பும் சேர்ந்து வீணானது. காங்கிரஸ் கட்சியில் இருந்த இத் தகைய அழுகிய பிணங்களின் சுமையைச் சேர்த்துச் சுமந்ததும் கழகத்தின் வாக்குகள் சரிய ஒரு காரணமாக அமைந்துவிட்டது. அந்தச் சுமையைத் தூக்கி எறிந்தபின்னர் மக்களிடம் கழகத்துக்கான ஆதரவு தற்போது பன்மடங்கு பெருகியிருக்கிறது.

கழக உடன்பிறப்புகள் புத்துணர்ச்சி பெற் றிருக்கிறார்கள். நடந்து முடிந்த இடைத்தேர் தல் முடிவுகளும் அதைத்தான் சொல்கின் றன. "தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி நடைபெறும் போராட்டத்தில் திமுக எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை." என்று கூற மாணிக்கம் தாகூருக்கு முதலில் என்ன தகுதி இருக்கிறது? தமிழ்நாட்டில் SIR-க்கு எதிராகப் போராடிய இளைஞர்கள் தவெக அரசால் கைது செய்யப்பட்டபோது, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை விடுவிக்கக் கோரிப் போராட்டம் நடத்தினர். அப்போது காங்கிரஸ் என்ன செய்துகொண் டிருந்தது? முதலமைச்சர் விஜய் அவர்க ளோடு காபி குடித்துக்கொண்டிருந்தவர்கள் கழகம் குறித்துப் பேசலாமா?

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் தேர்தல் ஆணையத்தில் நடைபெற்ற முறை கேடுகள் குறித்த கட்டுரை வெளியானதும்,

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

இனி எங்கள் வழி தனி வழி!

பதவிப் பிச்சைக்காக கூட்டணி தர்மத்திற்கு எதிராக காங்கிரஸ் புல்லுருவிகள் தி.மு.க.வுக்குச் செய்த துரோகத்தையடுத்து இந்தியா கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியேறிவிட்டோம். இந்தியா கூட்டணியில் இல்லாத தி.மு.க. இனி அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களில் இணைய வேண்டிய அவசியம் இல்லை. இணைய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் உரிமையும் அவர்களுக்கு இல்லை. இனி எங்கள் வழி, தனி வழி!



கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடும் மருத்துவப் பணியாளர்கள் மீது போலீஸ் அராஜகம்!

சோபா மாடல் அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 13 -

"பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடவிருந்த பன்னோக்கு மருத் துவப் பணியாளர்களை வீட்டில் வைத்தே கைது செய்வதா?" என்று Sofa Model அரசுக்கு சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி சென்னையில் போராட்டத் தில் ஈடுபட்ட மருத்துவமனை பணியாளர் களை காவல்துறையினர் தரதரவென இழுத்துச் சென்று கைது செய்ததால் பதற்றம் நிலவியது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆரம்ப சுகா தார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனை களில் சுமார் 3 ஆயிரத்து 500 மருத்துவ மனை பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். பணி நிரந்தரம் உள்ளிட்ட வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அவர் கள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்துள் ளனர். தங்களது கோரிக்கைகளை வலியு றுத்தி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்காக வந்த அவர் களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். இதனால், இருதரப்பினருக்கும் இடையே பயங்கர தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

போலீசார் அனுமதி மறுத்த நிலையில், தடையை மீறி மருத்துவமனை பணியாளர் கள் போராட்டத்தை தொடர முயன்றனர், ஆனால், அவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றும், தரதரவென இழுத்துச் சென்றும் போலீசார் கைது செய்தனர்.

போலீசாரின் அராஜகத்தைக் கண்டித்தும், த.வெ.க. அரசுக்கு எதிராகவும் முழக்கங்களை எழுப்பிய மருத்துவமனை பணியாளர்கள், தங்களின் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஆனால், அவர்களை துரத்திச் சென்று காவல் துறையினர் கைது செய்தனர். கழிவறைக்கு சென்றவர்களையும் இழுத்து சென்று கைது செய்த காவல்துறையினர், சாலையோரத்தில் நின்றவர்களையும் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.



இப்போராட்டம் குறித்து செய்தியாளர்களி டம் பேசிய பல்நோக்கு மருத்துவமனை பணி யாளர் மேம்பாட்டு சங்கத்தின் தலைவர் பாரதி, த.வெ.க. அளித்த தேர்தல் வாக்குறுதியின்படி பணி நிரந்தரம் செய்யக் கோரி உண்ணாவி ரதப் போராட்டம் நடத்த திட்ட மிடப்பட்டதாக வும், ஆனால், அமைச்சருக்கு எதிராக பேசிய தற்காக தங்களின் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் குற்றம்சாட்டி னார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

தேர்தல் முறைகேடு களுக்கு எதி ராக டெல்லிக்கு போராடச் செல்லும் இளைஞர்களை ஆங்காங்கே கைது செய்யும் ஓனர்களின் பாணியில்,

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி சென்னைக்கு வந்து போராடவிருந்த பன்னோக்கு மருத்துவப் பணியாளர்களை ஆங்காங்கே வீட்டுக்காவலில் வைக்கும் இந்த Sofa Model அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

Reels அரசு அராஜகம்!

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மருத்துவப் பணியாளர்களுக்கு தந்த வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு போராட்டத் திற்குப் புறப்படும் முன்பே வீட்டில் வைத்து கைது செய்யும் அளவுக்கு இந்த Reels அரசு அராஜகம் செய்வது ஏன்?

விவசாயிகள் - மாணவர்கள் - செவிலி யர்கள் என ஜனநாயக வழியில் போராட்டம் செய்யும் எந்தப் பிரிவினரை யும் நேரில் அழைத்துப் பேசாமல் அடக்குமுறையை ஏவு வதற்குப் பெயர் தான் மாற்றமா?

உடனே விடுதலை செய்ய வேண்டும்!

மருத்துவப்பணிகளின் முதுகெலும்பாக இருக்கும் பன்னோக்கு பணியாளர்களை உடனே விடுதலை செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த Dummy முதலமைச் சர் முன்வர வேண்டும். அவர்களின் நியாய மான கோரிக்கைகளை நிறை வேற்றிட நட வடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.